காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் வார்டு - கிளைகள் வாரியாக

# கழக இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்கள் சேர்ப்பதற்காக மாவட்டக் கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகள்!

## மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



நம்முடைய ஒப்பாரும் - மிக்காரும் இலா அன்புத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களால் 1980-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட பெருமை மிக்க தி.மு.கழக இளைஞர் அணியை, தம்முடைய இடைவிடாத உழைப்பின் மூலம் வலிமை வாய்ந்த ஆற்றல் மிக்க அணியாக உருவாக்கி, 30 ஆண்டுகாலம் இளைஞர் அணி வளர்ச்சிக்காக உழைத்த தரணி போற்றும் தன்னிகரில்லா தலைவர் தளபதி அவர்களுக்கு பின்னால், அவர்காட்டிய நல்வழியில்,

2019-ஆம் ஆண்டு கழக இளைஞர் அணி செயலாளராக நம்முடைய இளைய தலைவர் மாண்புமிகு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்று, 25 லட்சம் புதிய இளைஞர்களை கழக இளைஞர் அணியில் சேர்த்து கழக இளைஞர் அணிக்கு புத்துயிர் ஊட்டி, கழகத்தின் இளைஞர் பட்டாளத்தை மிகச்சிறப்பாக வழி நடத்தி வரும் நிலையில்,

இன்றைக்கு 45-ஆம் ஆண்டில் அடியெடுத்து வைத்துள்ள கழக இளைஞர் அணி, வருங்காலத்திலும் வலிவோடும் - பொலிவோடும் திகழ்ந்திட வேண்டும் என்பதற்காக, “இல்லந்தோறும் இளைஞர் அணி உறுப்பினர் சேர்க்கை” என்ற உன்னத திட்டத்தை அறிவித்து, இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்களை சேர்த்திட வேண்டும் என்று “இளைஞர்களின் இதயம் கவர்ந்த இளம் தலைவர்” அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அன்பு கட்டளைக் கிணங்க,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் மாநகர - பகுதி - ஒன்றிய - நகர - பேரூர்களில் அடங்கி உள்ள வார்டு - கிளைகளில், 15 வயது நிரம்பிய இளைஞர்களை வீடு வீடாகச் சென்று, தாய் கழகத்தில் புதிய உறுப்பினர்களை சேர்ப்பது போல கழக இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்களை சேர்த்து,

கழகத்தின் வருங்கால வளர்ச்சிக்கு சிறப்பான அடித்தளம் அமைத்திடும் இன்றியமையாத பணியில், அந்தந்த வார்டு - கிளைகளில் உள்ள செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், அந்தந்த பகுதியில் உள்ள இளைஞர் அணி நிர்வாகிகள் ஒன்றிணைந்து செயல்பட்டு, வார்டு - கிளைகளில், புதிய உறுப்பினர்களை சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வீடு வீடாகச் சென்று சேர்த்து இளைஞர் அணி அமைப்பை பலப்படுத்திட வேண்டும் என்றும், இதற்கான பணிகளை அந்தந்த ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள் முன்னின்று செய்திட வேண்டும் என்றும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் வாரியாக வார்டு - கிளைகளில், 15-வயது நிரம்பிய இளைஞர்களை, கழக இளைஞர் அணியில் சேர்த்திடும் மிக முக்கியமான பணியை அந்தந்தப் பகுதியில் முழுமையாக நடைபெறுவதை கண்காணிப்பதற்காக, மாவட்டக் கழகத்தின் சார்பில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள விவரப்படி ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் வாரியாக பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்பட உள்ளார்கள்.

| வ. எ. | ஒன்றிய/ நகர்/ பகுதி/ பேரூர் | மாவட்ட கழகத்தால் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதி |
|---|---|---|
| 1. | திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | டி.கே.கமலக்கண்ணன்<br>மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |
| 2. | திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | எல்.பிரபு<br>மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் |
| 3. | திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | வீ.விஜயகுமார்<br>மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |
| 4. | குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | கோல்டு டி.பிரகாஷ்<br>மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் |
| 5. | குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | க.அன்புச்செல்வன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 6. | திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | தி.க.பாஸ்கரன்<br>மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் |
| 7. | திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | டி.எஸ்.எம்.ஜெயகரன்<br>மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் |
| 8. | காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | மா.கணேஷ்பாபு<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 9. | காட்டாங்குளத்தூர் தெற்கு ஒன்றியம் | செந்தில் தேவராஜ்<br>மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் |
| 10. | புனித தோமையார்மலை வடக்கு ஒன்றியம் | ஆதிமாறன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 11. | ஆலந்தூர் வடக்கு பகுதி | த.வினோத்குமார்<br>மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் |
| 12. | ஆலந்தூர் தெற்கு பகுதி | இரா.பொன்னுராம்<br>தொ.மு.ச. பேரவைச் செயலாளர் |
| 13. | பம்மல் வடக்கு பகுதி | வ.விஜயரங்கன்<br>தாம்பரம் மாநகர பொருளாளர் |
| 14. | பம்மல் தெற்கு பகுதி | அ.தமிழ்மாறன்<br>கழக தகவல் தொழில் நுட்ப அணி துணை செயலாளர் |
| 15. | பல்லாவரம் வடக்கு பகுதி | எம்.எஸ்.கே.இப்ராகிம்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 16. | பல்லாவரம் தெற்கு பகுதி | ஆர்.எஸ்.சங்கர்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 17. | செம்பாக்கம் வடக்கு பகுதி | க.வசந்தகுமாரி<br>தாம்பரம் மாநகராட்சி மேயர் |
| 18. | செம்பாக்கம் தெற்கு பகுதி | கோ.காமராஜ்<br>தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் |
| 19. | தாம்பரம் கிழக்கு பகுதி | கோ.ஜானகிராமன்<br>மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |
| 20. | தாம்பரம் மேற்கு பகுதி | எஸ்.ஆல்பர்ட்<br>மாவட்ட சிறுபான்மையின பிரிவு அமைப்பாளர் |
| 21. | பெருங்களத்தூர் வடக்கு பகுதி | சாய் ஜெய்காந்த் பாரதி<br>கழக சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் |
| 22. | பெருங்களத்தூர் தெற்கு பகுதி | மு.நி.தமிழ்குமரன்<br>மாவட்ட மாணவர் அணி மு.துணை அமைப்பாளர் |
| 23. | செங்கல்பட்டு நகரம் | ஜி.சி.அன்புச்செழியன்<br>தலைமை செயற்குழு உறுப்பினர் |
| 24. | மறைமலை நகர் நகரம் | ஜெ.சிவபாதம்<br>மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் |
| 25. | நந்திவரம் – கூடுவாஞ்சேரி நகரம் | மணிகண்டன்<br>மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |
| 26. | குன்றத்தூர் நகரம் | பொன்.ரமேஷ்கவி<br>மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் |
| 27. | மாங்காடு நகரம் | கே.எத்திராஜ்<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 28. | கண்டோன்மெண்ட் நகரம் | து.மூர்த்தி<br>மாவட்ட துணைச் செயலாளர் |
| 29. | மாமல்லபுரம் நகரம் | பா.ஞானப்பிரகாசம்<br>மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் |
| 30. | திருப்போரூர் பேரூர் | கோவிந்தன்<br>மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் |
| 31. | திருக்கழுக்குன்றம் பேரூர் | செ.அருள்தேவி<br>தலைமை பொதுக்குழு உறுப்பினர் |
| 32. | திருப்பெரும்புதூர் பேரூர் | ப.ராமமூர்த்தி<br>மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் |

கழக இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை கண்காணிப்பதற்காக, மாவட்டக் கழகத்தின் சார்பில் அனுப்பி வைக்கப்படும் பிரதிநிதிகளிடம், அந்தந்த ஒன்றிய - நகர - பகுதி - பேரூர் கழகச் செயலாளர்கள், அந்தந்த ஒன்றிய - நகர - பகுதி - பேரூர்களில் வார்டு - கிளை வாரியாக இளைஞர் அணியில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் சுற்றுப்பயண விவரத்தை பட்டியலிட்டு துண்டறிக்கையாக அச்சிட்டு தந்து, அவர்களுடன் சென்று இளைஞர் அணி உறுப்பினர்கள் சேர்க்கும் பணியை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திடும் படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **தா.மோ.அன்பரசன்**

செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த கல்யாணகுமார் குடும்பத்தினரை நேரில் சந்தித்து, ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வெங்கடேஷ் உட்பட பலர் உள்ளனர்.



முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், கேரள மாநிலம், வயநாடு மாவட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்த காளிதாஸ் குடும்பத்தினரை நேரில் சந்தித்து, ஆறுதல் தெரிவித்து, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.லட்சுமி பவ்யா தண்ணீரு, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் வெங்கடேஷ் மற்றும் மாவட்ட செயலாளர் பா.மு.முபாரக் உட்பட பலர் உள்ளனர்.

பி.டி.பாண்டிச்செல்வம் வரவேற்பு! ஆர்.டி.சேகர் - ஜே.ஜே.எபினேசர் - கே.பி.சங்கர் - மேயர் பிரியா பங்கேற்பு!

# வடசென்னையில் 5 நாட்கள் நடைபெறும் புத்தகக் கண்காட்சி!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் துவக்கி வைக்கிறார்!வி.ஜி.சந்தோஷம் தலைமை!

சென்னை, ஆக. 1 -

கழக வர்த்தகர் அணி இணைச் செயலாளரும் நேசம் நிர்வாகியுமான பி.டி.பாண்டிச்செல்வம் நிகழ்ச்சி ஏற்பாட்டில் வட சென்னை புத்தகத் திரு விழா சென்னை சுங்கச் சாவடி அருகேயுள்ள தங் கம் மாளிகையில் இன்று (1.8.2024) முதல் தொடங்கி 5ஆம் தேதி வரை ஐஏந்து நாட்கள்ந டைபெறுகிறது.

நேசம் மனிதவள மேம் பாட்டு மையம் சார்பில் ஆண்டுதோறும் நடைபெ றும் புத்தகத் திருவிழா இந்த ஆண்டு வாசிப் போம் சுவாசிப்போம் எனும் தலைப்பில், சென்னை சுங்கச் சாவடி அருகேயுள்ள தங்கம் மாளிகையில் ஆக. 1ஆம் தேதி முதல் 5ஆம் தேதி வரை காலை 10 மணி முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறுகிறது.

தங்கம் மாளிகையில் ஆக. 1ஆம் தேதி காலை 10 மணிக்கு புத்தகத் திரு விழா வுக்கு தொழிலதிபர் டாக்டர் வி.ஜி.சந்தோஷம் தலைமை வகிக்கிறார். ம னி த நே ய ர் ஜி.வரதராஜன், அரிமா என்.துரைராஜ், டாக்டர் செல்வராஜ்குமார், சமூக ஆர்வலர்கள் எம்.மதியழ கன், ஆர்.ரமேஷ் உட்பட பலர் முன்னிலை வகிக்கின் றனர். நேசம் நிர்வாகி பி.டி.பாண்டிச்செல்வம் வரவேற்கிறார்.

சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமசந்திரன் தொடங்கி வைக்கிறார்.

மேயர் பிரியா, எம்.எல்.ஏ.க்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், கே.பி. சங்கர், முன்னாள் எம் எல்ஏ உ.பலராமன், நடிகர் கே.ராஜன், இரா.லட்சும ணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், தி.மு.தனிய ரசு, வை.ம.அருள்தாசன், சேவாபாலம் இருளப்பன், டாக்டர் ராஜ்குமார், கல் வியாளர் மார்டின் கென் னடி, பர்வீன் அப்சல், குறிஞ்சி கணேசன், கல்வி யாளர் தேவானந்த், ராபர்ட், எழுத்தாளர் லதா சரவணன், பத்திரிகையா ளர் வான்மதி, சக்தி பப்ளி சர், சொஸைட்டி ஆர். வரதன், ராயல் கேட்ரிங், மேன்பவர் நாராயணன், ஓவியர் உமாபதி, சமூக ஆர்வலர் யாயா.கார்த்திக், சதுரங்கப் பயிற்சியாளர் வேலாயுதம், சிலம்ப ஆசி ரியர் சண்முகம் உட்பர பலர் பேசுகின்றனர்.

பாஸ்கர், எம்.என்.கதி ரேசன் நன்றி கூறுகிறார். முன்னதாக, சிலம்பப் போட்டி நடைபெறுகி றது.

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்

# கா.வீ.தியாகராஜனின் தாயார் மறைவு!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. - ஏ.எம்.வி.பிரபாகர ராஜா எம்.எல்.ஏ. அஞ்சலி!

சென்னை, ஜுலை 31 -

சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தாயார் 28.07.2024 அன்று இயற்கை எய்தினார் என் பதை அறிவிக்க வருந்துகி றோம்.

மறைவு செய்தி அறிந்து அன்னாரது இல்லத்திற்கு சென்னை தெற்கு மாவட் டக் கழகச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச் சர் மா.சுப்பிரமணியன் நேரில் சென்று அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தி குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார்.

மேலும் இந்நிகழ்வில், சோழிங்கநல்லூர் சட்ட மன்ற உறுப்பினர்கள் எஸ். அரவிந்தரமேஷ், விருகம் பாக்கம் சட்டமன்ற உறுப் பினர் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, பகுதி கழக செயலா ளர் - 15வது மண்டல குழு தலைவர் வி.இ.மதியழகன் மற்றும் மாவட்ட கழக நிர் வாகிகள், மாவட்ட பகுதி, வட்ட செயலாளர்கள், இளைஞர் அணி மாவட்ட நிர்வாகி கள் மற்றும் அணி களின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பா ளர்கள் , கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு அன்னா ரது உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தி னார்கள்.



முதலமைச்சர் அவர்களின் சீரிய திட்டமான ‘மக்களுடன் முதல்வர்’ நிகழ்ச்சி திருவள்ளூர் தொகுதி திருவாலங்காடு மேற்கு ஒன்றியத்திற்குட்பட்ட இராமாபுரம், இலட்சுமாபுரம், அரும்பாக்கம், மாமண்டூர், ஆற்காடு குப்பம், அருங்குளம், இலுப்பூர் ஆகிய ஊராட்சிகளுக்காக ஆற்காடு குப்பத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர் ஐ.ஏ.எஸ்., தலைமையில் திருவள்ளூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது.இந்நிகழ்ச்சியில் திருத்தணி வட்டாட்சியர், திருவாலங்காடு வட்டார வளர்ச்சி அலுவலர் காளியம்மாள், அரசு துறைகளின் மாவட்ட, ஒன்றிய அளவிலான அலுவலர்கள், திருவாலங்காடு மேற்கு ஒன்றிய கழக செயலாளர் கூளூர் எம்.இராஜேந்திரன், திருவாலங்காடு கிழக்கு ஒன்றிய செயலாளர் எஸ்.மகாலிங்கம், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் வி.எஸ்.நேதாஜி, ஒன்றிய நிர்வாகிகள் காஞ்சிப்பாடி பி.சரவணன், கமலநாதன் இலட்சுமாபுரம் வேலன், ஊராட்சி மன்ற தலைவர் சிவகாமி ஆண்டியப்பன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் காஞ்சிபாடி ஆர்.யுவராஜ், துணை அமைப்பாளர்கள் திலகன், அம்பேத், பி.ஆர் பாபு, கிளை செயலாளர்கள் லோகநாதன், இராகவன், சந்திரசேகர், பரமசிவம், மணி உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள், 1000 – ற்கும் மேற்பட்ட பொதுமக்கள் பங்கேற்றனர்.நிகழ்ச்சியில் பங்கேற்ற பொதுமக்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது.

# மயிலை மேற்கு பகுதி ஆலோசனைக் கூட்டம்!

## பகுதி செயலாளர் நந்தனம் மதி எம்.சி. அறிக்கை!

சென்னை, ஆக. 1-

சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை மேற்கு பகுதி ஆலோசனைக் கூட் டம் இன்று (01/08/2024) மாலை 05:30மணியளவில்

121வது வார்டு மாமன்ற அலுவலகத்தில் நடைபெறு கிறது.

இதில் பகுதி அவைத் தலைவர் ஜி.ஆர்.ராஜேந்தி ரன் தலைமையில் பகுதி துணை செயலாளர்கள் ஆர். எல்.வி.அசோக், பா.பாக்கிய தாஸ், அகல்யா விஸ்வநாதன், பகுதி பொரு ளாளர் ஜி.முருகையன் ஆகி யோரின் முன்னிலையில் ஆலோசனை கூட்டம் நடைபெறுகிறது.

பொருள்: முத்தமிழ் அறி ஞர் கலைஞர் அவர்களின் நினைவு நாள் மற்றும் கழக ஆக்க பணிகள்

எனவே இக்கூட்டத் திற்கு பகுதி கழக நிர்வாகிகள்,வட்ட கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப் பாளர்கள் மற்றும் பகுதி அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளபடுகிறது.

## தூத்துக்குடி வடக்கு மாவட்டம்

# தூத்துக்குடி மாநகரம், திரேஸ்புரம் பகுதி, 25வது வட்டக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தூத்துக்குடி வடக்கு மாவட்டம், திரேஸ்புரம் பகுதி, 25வது வட்டச் செயலாளர் எஸ். அந்தோணிசாமி (எ) அண்டோ அவர்கள் சரிவர கழகப் பணியாற்றாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணி கள் செவ்வனே நடைபெற அவருக்குப் பதிலாக திரு. **ஜேம்ஸ் ரோலண்ட்.** (30, வடக்கு ராஜா தெரு, தூத்துக்குடி 1.) அவர்கள் 25வது வட்டக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்


**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 31.07.2024

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ஈரோடு மு. சின்னசாமி

## ஆகஸ்ட் 1 (1979)



தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக 1967ல் ஈரோடு தொகுதியிலும், 1971ல் மொடக்குறிச்சி தொகுதியிலும் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பாக பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

ஈரோடு, ஆப்பக்கூடலில் 1969ஆம் ஆண்டு ஏப்ரல் 7ஆம் தேதி தலைவர் கலைஞர் கலந்து கொண்ட கூட்டத்தில் திடீரென்று சூறாவளிக் காற்றுடன் பலத்த மழை கொட்டியதால் பந்தல் மேடை சரிந்து விழுந்ததோடு, மின்சாரமும் தடைபட்டு என்ன நடக்கிறது என்று தெரியாத நிலை ஏற்பட்டபோது, தலைவரை தனது தோளில் தூக்கிக் கொண்டு காருக்கு சென்று சேர்த்தார்.

இந்நிகழ்வை தலைவர் கலைஞர் தனது ‘நெஞ்சுக்கு நீதி’ நூலில் குறிப்பிட்டுள்ளார்.



**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**